**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

## மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை –15.09.2016

### மாநிலத்தின் கடந்தவாரவானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 29$^{\circ}$செ முதல் 38$^{\circ}$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22$^{\circ}$செ முதல் 28$^{\circ}$செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16$^{\circ}$செ முதல் 20$^{\circ}$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10$^{\circ}$செ முதல் 13$^{\circ}$செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது

### வானிலை முன்னறிவிப்புமற்றும் அறிவுரைகள் (13.09.2016 முதல் 17.09.2016)

**1. மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் ஐந்து நாட்களுக்கும் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33$^{\circ}$செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22$^{\circ}$செ முதல் 23$^{\circ}$செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 முதல் 78 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 60 முதல் 62 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 15 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்

**வேளாண் அறிவுரை**

- எதிர்பார்க்கப்படும் தூறல் மழையினை பயன்படுத்தி மத்தியகால வயதுடைய நெல் இரகங்களை சம்பா நெல் நாற்றாங்காலில் விதைக்கவும்.
- நெல் விதைப்பு செய்துள்ள வயல்களில் இரவில் நீர்தேக்கி காலையில் வடிப்பதனால் மழையினால் ஏற்படும் பாதிப்பை தவிர்க்கலாம்.
- நேரடி நெல் வயல்களில் போதுமான மழை பெறப்பட்டவுடன் மத்தியகால வயதுடைய நெல் இரகங்களை நேரடி விதைப்பு செய்யவும்.
- ஐந்து மாதங்கள் மற்றும் அதற்கு மேலுள்ள வாழை மரங்கள் அதிக காற்றினால் பாதிக்கப்படாமல் இருக்க முட்டு கொடுக்கவும்.
- இறவை மஞ்சளில் நுண்ணூட்டச்சத்து குறைபாடு தென்பட வாய்ப்புள்ளது. இதனை தவிர்க்க ஒரு எக்டருக்கு 250 லிட்டர் தண்ணீரில் 375 கிராம் பெரஸ்சல்பேட், 375 கிராம் ஜிங்சல்பேட், 375 கிராம் போரக்ஸ் மற்றும் 375 கிராம் யூரியா கலந்து தெளிக்கவும். 25 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடனும் காணப்படும். இலேசானமழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 35°செ ஆகவும்,குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 55 முதல் 68 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாககாற்றின் வேகம் 5 கி.மீ முதல் 13 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள குறுவை நெல்லினை தக்க பாதுகாப்புடன் அறுவடை செய்யவும்.
- சம்பா வயல்களில் நேரடிவிதைப்பு செய்யும் பொழுது டிராக்டர் மூலம் இயங்கும் விதைக்கும் கருவிக்கு ஏக்கருக்கு 15 கிலோ மற்றும் ஆட்கள் கொண்டு தெளிக்கும் பொழுது ஏக்கருக்கு 30 கிலோ விதை அளவும்பரிந்துரைக்கப்படுகிறது. விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள்மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள்அழிந்து விடும்.
- சம்பா நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம், 10 கிலோ ஜிங்சல்பேட், 15 கிலோயூரியா, 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும்.
- சம்பா நடவிற்கு முன் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.
- பின் சம்பா, தாளடி பருவத்திற்கு ஆடுதுறை 38, ஆடுதுறை 46, ஆடுதுறை 49 மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, திருச்சி 3, மற்றும் கோ 50 ஆகிய இரகங்கள் சாகுபடி செய்ய சிபாரிசு செய்யப்படுகிறது.

**3. தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது35°செ முதல் 37°செ ஆகவும்,இரவுநேர வெப்பநிலை 24°செ முதல்26°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 55 முதல் 80 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 முதல் 12 கி.மீவேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- *மானாவாரியில் மண் மற்றும் ஈரத்தை பாதுகாக்கும் முறையாக நிலத்தை சட்டிக்கலப்பையை பயன்படுத்தி ஆழமாக உழவு செய்யவும். கடைசி உழவிற்கு முன்பு தொழு உரம் அல்லது கம்போஸ்ட் 12.5 டன்/ எக்டர் என்ற அளவில் இடவும். ரோட்டோவேட்டர் கருவியை பயன்படுத்தி நிலத்தை நன்கு பண்படுத்தவும்.*
- *மானாவாரியில் வரும் வடகிழக்கு பருவமழை பருவத்தில் சரியான சமயத்தில் விதைக்க ஏதுவாக விதைகள், விதைநேர்த்தி செய்ய பயன்படுத்தப்படும் மருந்துகள், இயற்கை உரங்கள் மற்றும் செயற்கை உரங்கள் போன்ற இடுபொருட்களை வாங்கி தயார்நிலையில் வைத்திருக்கவும்.*
- *மானாவாரியில் வரும் வடகிழக்கு பருவமழை பருவத்தில் பயிரிட பயிர் சாகுபடி பருவத்தில் ஏற்படும் வறட்சியை தாங்கி பூச்சி மற்றும் நோய்த்தாக்குதலை எதிர்த்து வளரும் இரகங்களை தெரிவு செய்யவும். பருத்தியில்* KC 3, *மற்றும்* PA 255, *மக்காச்சோளத்தில்* CoH(M) 6, *சோளத்தில்* K 8 *மற்றும்* K 12, *பாசிப்பயிரில்* CO 6, *சூரியகாந்தியில்* CO 4, *கம்பில்* CO(Cu) 9, *எள்ளில்* TMV 3, *கொத்தமல்லியில்* CO 4, *சென்னாவில்* KKM 1 *ஆகிய இரகங்கள் மானாவாரிக்கு உகந்தவை.*

**தெற்கு மண்டலம் -2**

*வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். தேனி மாவட்டத்தில் **16.09.2016** அன்று மிதமானமழையும், மற்ற மாவட்டங்களில் இலேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாாவட்டத்தில் **23**°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் **35**°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாாவட்டத்தில் **19**°செ, மற்ற மாவட்டங்களில் **24**°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் **55** முதல் **75** சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் **13** கி.மீ வரை வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ✓ கடந்த சில நாட்களாக பெய்த மழையைப் பயன்படுத்தி சம்பா வயல்களை தயார் செய்யவும்.
- ✓ சம்பா வயல்களில் நேரடிவிதைப்பு செய்யும் பொழுது டிராக்டர் மூலம் இயங்கும் விதைக்கும் கருவிக்கு ஏக்கருக்கு 15 கிலோ மற்றும் ஆட்கள் கொண்டு தெளிக்கும் பொழுது ஏக்கருக்கு 30 கிலோ விதை அளவும் பரிந்துரைக்கப்படுகிறது. விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- ✓ மானாவாரியில் சரியான சமயத்தில் விதைக்க ஏதுவாக விதைகள், விதைநேர்த்தி செய்ய பயன்படுத்தப்படும் மருந்துகள், இயற்கை உரங்கள் மற்றும் செயற்கை உரங்கள் போன்ற இடுபொருட்கள் வாங்கி தயார்நிலையில் வைத்திருக்கவும்.

- ✓ கொட்டகையின் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்வதன் மூலம் ஒட்டுண்ணிகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்தி அதனால் பரவும் நோய்களை கட்டுப்படுத்தலாம்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 19° செஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 85 முதல் 92சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 7கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை.**

- ✓ உருளை கிழங்கில் வெப்ப நிலை மாற்றம் காரணமாக, சாம்பல் நோயை கட்டுப்படுத்தசைமோமாக்சில் 8%+மாங்கோசெப் 64 %சதவீத மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2கிராம் என்ற அளவில் கரைத்து தெளிக்கவும்.
- ✓ தொடர் மழையின் காரணமாக, கோஸ் மற்றும் காலிபிலவரில் தலை அழுகலை தடுக்க, காப்பர் ஆக்ஸிகுளோரைடு 2 கிராம் அளவில் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ பெய்து வரும் மழையை பயன் படுத்தி, மிளகு கொடிக்கு, 110 கிராம் யூரியா, 110 கிராம் பொட்டாஸ் மற்றும் 110 கிராம் சூப்பர் பாஸ்பேட் உரத்தை செப்டம்பர் மாதம் இடவும்.
- ✓ தோட்டக்கலை பயிர்களின் நடவின் போது, ஹெக்டேருக்கு 12 டன் நன்கு மட்கிய தொழு உரம் இடவேண்டும்.

**5.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் தென்படும்.இலேசான மழை பெற வாய்ப்புள்ளது. பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை24°செ முதல்25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 56 முதல் 76 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது.காற்று மணிக்கு 5கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தென்மேற்கு பருவமழை தற்போது தாக்கமற்று காணப்படுகிறது. ஆயினும், தென்மேற்கு பருவமழைக் காலமாதலால், பிற்பகலுக்கு மேல் மிதமான மேகமூட்டமும், சில இடங்களில் லேசான மழையுடனுமான வானிலை நிலவும். கோழிகளில் தீவன எடுப்பும், முட்டை உற்பத்தியும் இயல்பாகவே இருக்கும்.
- ✓ தீவன மூலப்பொருட்கள் பூஞ்சான நச்சு பரிசோதனையும்,. ஈரத்தன்மையும் பரிசோதனை செய்யப்பட்ட பின்னரே பயன்படுத்தப்பட வேண்டும்.

- ✓ வருகின்ற புரட்டாசி பட்டத்தில் பயறு வகைப் பயிர்களை சாகுபடி செய்தால் நல்ல மகசூலைப் பெறலாம். குறுகிய வயதுடைய (60 முதல் 65 நாட்கள்) உளுந்து இரகங்களான கோ.6. வம்பன்-3 அல்லது 6 அல்லது வம்பன்(உளுந்து 4) மற்றும் 5 போன்ற இரகங்களை தேர்வு செய்யலாம். ஒரு ஏக்கருக்கு 10 கிலோ விதை தேவை. விதை நேர்த்தி செய்ய 1 கிலோ விதையுடன் 4 கிராம் *டிரைக்கோ டெர்மா விரிடி* அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் கலந்து விதைப்பு செய்யவும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை பெற வாய்ப்புள்ளது. பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல்26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 75 மற்றும் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 5 கி.மீ முதல் 15 கி.மீவரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ➢ தற்போதைய வானிலையில் கறவை மாடுகள் மற்றும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் வருவதற்கு வாய்ப்புள்ளது. வரும் செப்டம்பர் மாதம் 1 ம் தேதி முதல் 30 ம் தேதி வரை கோமாரி நோய் தடுப்பு ஊசி கிராம கால்நடை மருத்துவமனைகளில் இலவசமாக போடப்படும். விவசாயிகள் இச்சேவையினை பயன்படுத்திக் கொண்டு கால்நடைகளை இந்த நோய் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும்.
- ✓ அடைப்பான் நோய் தாக்க வாய்ப்புகள் பகுதிகளில் உழவர்கள் தங்களுடைய மாடு மற்றும் ஆடுகளுக்கு அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தை அணுகி அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ காற்று எதிர்பார்க்கப்படுவதால் முன்பட்ட மற்றும் நடுபட்டங்களில் பயிரிடப்பட்ட கரும்பிற்கு விட்டம் கட்டவும். மேலும் 5 மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணபபடும். மேலும், ஐந்து நாட்களில் 2.0 மி.மீ மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை $33^0$ செ ஆகவும், குறைந்த பட்ச வெப்ப நிலை $24^0$ செ ஆகவும், காற்றின் ஈரப்பதம் தோரயமாக 74 முதல் 78 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் சராசரியாக மணிக்கு 25 கி.மீ வேகத்தில் வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- இவ்வருடம் நடவு செய்த வாழை, மா, ஜாதிக்காய், கிராம்பு, மிளகு, ரப்பர் போன்ற பயிர்களுக்கு நீர் பாய்ச்சுதல் வேண்டும்.
- வெப்பநிலை அதிகமாக இருப்பதால் காய்கறி பயிர்களுக்குபோதுமான அளவு நீர் பாய்ச்சவும்.
- காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் வாழை மரங்களுக்கு மூங்கில் கம்புகளால் முட்டு கொடுக்க வேண்டும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்,**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்,**
**த.நா.வே.ப.கழகம்,கோவை.**